**17 மாணிக்கம்விற்றபடலம்**

வீரபாண்டியன் மதுரையை சிறப்பாக ஆட்சி செய்து வந்தான். அவனுக்கு குழந்தை பாக்கியம் கிட்டவில்லை. சோமவார விரதத்தின் பலனாகவீரபாண்டியன் என்ற ஒரு சத்புத்திரனைப் பெற்றான்.வீரபாண்டியன் ஓர் நாள் வேட்டையாட சென்றபோது புலிக்கு இரையானான். இத்தருணத்தை சாதகமாக்கிக் கொண்ட பாண்டியனின் உறவினர்கள் அரண்மனையிலிருந்து ஆபரணங்களையும், மணி மகுடத்தினையும் கவர்ந்து சென்றுவிட்டனர்.

அமைச்சர்கள் வீரபாண்டியனின் மைந்தனுக் குமுடிசூட்ட எண்ணி, பொக்கிஷத்தை திறந்து பார்க்கையில், மகுடத்தைக் காணவில்லை. மற்றொன்று செய்வதற்கும் வேண்டிய பொன்னும் மணியும் இல்லாததால் திகைத்துநின்றனர்.

அமைச்சர்கள் வீரபாண்டியனின் புதல்வரையும் தம்முடன் அழைத்துக்கொண்டு சோமசுந்தர கடவுளைக் காண கோவிலுக்குள் சென்றனர். அப்போது ஈசனே, முத்தும், மணியும், பவளமும், இரத்தினங்களும் ஆபரணமாகத் தரித்து, நவரத்தின வணிகர் வேடம் தாங்கி, அவர்கள்முன்தோன்றிகுறைகளைக்கேட்டறிந்தார். பின் தான் கொண்டு வந்த வல்லாசுரனின் உடலின்உருப்புகளிருந்து தோன்றிய நவரத்தினங்களை கொடுத்து அருளி, வல்லாசுரனின் கதையையும் கூறினார்.

ஒரு சமயம் வலன் என்ற அசுரன் சிவபெருமானிடம், போரில் எவராலும் வெல்ல முடியாத வரத்தையும் தான் இறந்த பின்த ன் உடல் நவரத்தினங்களாக வேண்டும்எ ன்ற வாரத்தையும் பெற்றான். பின் இந்திரனுடன் போரிட்டு அவனைவென்றான்.

இந்திரன் வலனை சூழ்ச்சியால் வெல்ல எண்ணம் கொண்டான்.

வல்லனிடம் இந்திரன் சென்றபோது வலன் இந்திரனிடம் என்ன வரம் வேண்டும் என்று கேட்டான். பதிலுக்குஇந்திரன், தான் செய்ய விருக்கும் யாகத்திற்கு வலன் பசுவாக வரவேண்டும் என்று வேண்டினான். அதன் படி வலன் பசுவாகி வந்தான். யாகத்தில் இட்ட வல்லனின் உடல் இரத்தினங்களாக மாறின. அதனைக் கொண்டு மகுடம் செய்துமுடிசூட்டும்படிகூறியருளினார். அவனுக்கு அபிஷேகபாண்டியன் எனபெயரிடுமாறும் கூறினார். இவ்வாறு கூறிய ஈசன் ரிஷப வாகனத்தில் உமாதேவியுடன் காட்சியளித்து லிங்கத்துக்குள் மறைந்தார்.

அபிஷேக பாண்டியன் பல்லாண்டு நல்லாட்சி புரிந்து வாழ்ந்தான். சிறிது காலம் சென்றபின் பழைய பொக்கிஷமும் கிடைத்தன.

**பல்லவி**

புலிக்கு இரையாகிய பொன்னுலகம் அடைந்த - வீர
பாண்டியனின் பொற்கிரீடம் களவானதே

**அனுபல்லவி**

நலிந்து உன்னைச் சரண் அடைந்த மந்திரிகள் முன்
நவரத்தின வணிகனாய் வந்தாய்

**சரணம்**

இந்திரன் வலனைச் சூதால் பசுவாக மாற்றி - வதைக்க
அவன் உடல் நவரத்தினமாய் உன் அருளால் மாற
வந்த மணிகளால் மகுடம் செய்து முடி சூட்டி
அபிஷேக மன்னன் என்று பெயரிடச் செய்தாய்